# 8 பில்லியன்: எல்லையற்ற சாத்தியங்களின் உலகம்

**வீடியோ போட்டி!**

உலகின் சனத்தொகை **2022** நவம்பர் **15**இல் **8** பில்லியனாகிவிடும் என்று பொருளாதார மற்றும் சமூக அலுவல்களுக்கான ஐக்கிய நாடுகள் திணைக்களம் மதிப்பிட்டுள்ளது. மனிதகுலத்திற்கு இது ஒரு மைற்கல்லாகும். உடல்நலப் பராமரிப்பில் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்கள், உலகளாவிய வறுமைக்; குறைப்பு என்பவற்றின் பயனாக தாய்-சேய் மரண வீதங்கள் வீழ்ச்சி அடைந்திருப்பதுடன் மனித ஆயுட் காலமும் நீடித்துள்ளதால் முன்னொரு காலத்திலும் இல்லாத அளவு அதிகமான மக்களை உலகம் கொண்டுள்ளது!

**8** பில்லியன் மக்களின் உலகம் எல்லையற்ற சாத்தியங்களைப் பிரதிபலிக்கின்றது.

எமது சமுதாயம் எதிர்நோக்கும்; சவால்களுக்கு உங்கள் தீர்வுகளை ஆக்கபூர்வமான முறையில் பகிர்ந்துகொள்ள உங்களுக்கு இடமளிக்கும் பொருட்டு, உங்களுக்கான வீடியோ போட்டியொன்றை **UNFPA** இலங்கை நடத்துகின்றது. நம் அனைவருக்காகவும் சமத்துவமான, நிலைபெறு தன்மையுள்ள உலகைக் கட்டியெழுப்புவதற்கு உங்கள் யோசனைகள் பங்களிப்புச் செய்ய முடியும்.

## இப் போட்டியைப் பற்றி...

இலங்கையில் வசிக்கும் எவரும் இப் போட்டியில் கலந்துகொள்ளலாம்.

பங்குபற்றுவதற்கு:

1. போட்டித் தலைப்புகளில் ஒன்றைத் தெரிவு செய்யுங்கள்.
2. தெரிவு செய்யப்பட்ட தலைப்பின் கீழ் ஒரு குறிப்பிட்ட பிரச்சினையை ஆராய்ந்து அடையாளம் கண்டு, உங்கள் நிலைபெறுதகு தீர்வை உருவாக்குங்கள்.
3. பிரச்சினை மற்றும் அதற்கான உங்கள் தீர்வை விபரிக்கும் 1 முதல் 2 நிமிட வீடியோ ஒன்றைத் தயாரியுங்கள்.
4. உங்கள் வீடியோவை **Youtube** இல் பதிவேற்றம் செய்யுங்கள்.
5. ஒன்லைன் பிரவேசப் படிவத்தைப் பயன்படுத்தி **Youtube** இணைப்பை **(link)** சமர்ப்பியுங்கள்.
6. உங்கள் வீடியோவை பகிர்ந்து கூடுதலான **“Likes”** பெறுங்கள்.

விண்ணப்பங்கள் **3** பிரிவுகளில் ஏற்றுக்கொள்ளப்படும்:

1. சிறுவர் பிரிவு - **18** வயதிற்குக் கீழ்ப்பட்டவர்கள் தனித்தனியாக அல்லது குழுவாக வீடியோ ஒன்றைச் சமர்ப்பிக்கலாம்.
2. திறந்த பிரிவு - 18 வயதிற்குக் மேற்பட்டவர்கள் தனித்தனியாக அல்லது குழுவாக வீடியோ ஒன்றைச் சமர்ப்பிக்கலாம்.

விண்ணப்பிக்கும் குழு குறைந்தபட்சம் **2** மற்றும் கூடியபட்சம் **3** அங்கத்தவர்களைக் கொண்டிருக்க வேண்டும்.

## சமர்ப்பணத்திற்கான காலக்கெடு

- 2023 ஜனவரி 15 பி.ப. 5.00

## உங்கள் விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கும் முறை

- உங்கள் **Youtube** சனெலில் வீடியோவை பதிவேற்றம் செய்யுங்கள்.
- உங்கள் தகவல்களைக் கொண்ட ஒன்லைன் பிரவேசப் படிவத்தையும் உங்கள் **Youtube** வீடியோவுக்கான இணைப்பையும் சமர்ப்பியுங்கள்.

## போட்டித் தலைப்புகள்

### 1. முதுமையடையும் சனத்தொகை

கருவள வீழ்ச்சி மற்றும் ஆயுட்கால அதிகரிப்பின் விளைவாக உலகச் சனத்தொகை துரிதமாக முதிர்ச்சி அடைகின்றது. **2050**ஆம் ஆண்டிற்குள் வளர்முக நாடுகளிலுள்ள மக்களில் சுமார் ஐந்திலொருவர் **60** வயதிற்கு மேற்பட்டவராக இருப்பார்.

ஏனைய வளர்முக நாடுகளைப் பார்க்கிலும் இலங்கை துரிதமான கதியில் ஒரு முதுமையடையும் சமுதாயமாக மாறிவருகின்றது. **1981**க்கும் **2012**க்கும் இடையே **60** மற்றும் அதற்கு மேற்பட்ட வயதுடைய மக்கள் தொகையின் விகிதம் **6.6%** இலிருந்து **12.4%** ஆக அதிகரித்துள்ளது. **2037**ஆம் ஆண்டளவில் இது **22.1%** ஆக அதிகரிக்குமென மதிப்பிடப்பட்டுள்ளது. வயது அமைப்பிலான இந்த மாற்றம் சமுதாயத்தின் அரசியல், பொருளாதார மற்றும் சமூகக் கட்டமைப்பைப் பாதிக்கும் என்பதுடன், மூலவள பகிர்வு முறைகளில் மாற்றத்தையும் தேவைப்படுத்தும்.

சனத்தொகை முதுமை அடையும்போது, நாட்டில் கிடைக்கக்கூடிய தொழில் அணி மாற்றமடைவதுடன் உற்பத்தித் திறனிலும் பாதகமான விளைவுகள் ஏற்படும். மக்கள் தற்சமயம் நீண்ட காலம் வாழ்கின்றனர். ஆனால், பாரம்பரிய தொழில் முறைகள் இந்த மாற்றத்திற்கு இசைவாகச் சீராக்கப்படவில்லை. வயோதிபர்களின் வருமானத்தில் ஏற்படும் இழப்பு அவர்களின் வறுமைக்கும் அவர்கள் தமது குடும்பங்களிலும் ஓய்வூதியம், சமூக உதவி அல்லது சேமிப்புத் திட்டங்கள் ஊடாக அரசாங்கத்திலும் அதிகமாகத் தங்யிருக்க வேண்டிய நிலைக்கும் வழிகோலக்கூடும். வயோதிபர்களே நாட்டில் மிக வறிய வயதுப் பிரிவினராக

இருக்கின்றனர். **2019**ஆம் ஆண்டுக் கணக்கெடுப்பின்படி அவர்களின் எண்ணிக்கை விகிதம் **17.9%** ஆகும்.

வயது முதிர்ந்தவர்கள் தமது அன்றாட வாழ்க்கையில் பல துன்பங்களுக்கு முகங்கொடுக்கின்றனர். தொற்றாத நோய்களின் தாக்கம் அவர்களிடையே அதிகரித்து வருகின்றது. பெருந்தொகையான வயோதிபர்கள் நோய் காரணமாக ஏதாவது இயலாமையுடன் வாழ்ந்து வருகின்றனர். வயதுடன் தொடர்புடைய ஆரோக்கிய நிலைமைகளின் விளைவாக பலர் நடமாட்ட வரையறைகளுக்கு முகங்கொடுக்கின்றனர். போக்குவரத்து வசதியைப் பெறுவதிலுள்ள கஷ்;டம், முறைப்படியான வசிப்பிடம் இல்லாமை என்பவற்றின் விளைவாகப் பலர் தனிமைப்படுத்தப்பட்டுத் தனியாக வாழ்கின்றனர். இதனால் அன்றாட அடிப்படை அலுவல்களைச் செய்வதற்கான அவர்களின் இயலுமை மோசமாகப் பாதிக்கப்படுவதோடு அவர்களின் சுதந்திரம், தன்னியக்கம் மற்றும் வாழ்க்கைத் தரம் குறைவடையக்கூடும். வயோதிபம் என்பது பரவலாக நிலவும் ஒரு விடயமாக இருந்தபோதிலும் இதன் காரணமாக வயோதிபர்கள் சமுதாயத்தில் பங்குபற்றுவதும் சமுதாயத்திற்குப் பங்களிப்புச் செய்வதும் பாதிக்கப்படலாம். அவர்கள் ஓரங்கட்டப்பட்டுத் விலக்கிவைக்கப்படும் நிலைக்கு இது வழிகோலக்கூடும்.

முதுமையடையும் மக்களின் உள்ளார்ந்த ஆற்றல்களை வெளிக்கொணர்வதற்கான தீர்வுகளை நாம் கண்டறிய வேண்டும். வயோதிபர்களின் வாழ்க்கைத் தரத்தை முன்னேற்றவும் அவர்களின் உரிமைகளைப் பாதுகாக்கவும் அதன் மூலம் எமது சமுதாயத்திற்கான அவர்களின் பங்களிப்பை உறுதிப்படுத்தவும் வேண்டுமானால் தொழில், ஆரோக்கியம், சமூகப் பாதுகாப்பு, நகர வாழ்க்கை, வீடமைப்பு, போக்குவரத்து முதலிய துறைகளில் நாம் புதிதாகவும் ஆக்கபூர்வமான முறையிலும் சிந்திப்பது அவசியமாகும்.

## 2. பாலின சமத்துவம்

பாலின சமத்துவம் - பெண்களுக்கும் ஆண்களுக்கும் மற்றும் சிறுமிகளுக்கும் சிறுவர்களுக்கும் சமமான உரிமைகள், பொறுப்புகள் மற்றும் வாய்ப்புகள் - ஓர் அடிப்படை மனித உரிமையாகும். உலகச் சனத்தொகையில் கிட்டத்தட்ட அரைவாசிப் பேர் பெண்கள் ஆவர். கடந்த சில தசாப்தங்களில் நிலைமை முன்னேறியுள்ளபோதிலும், அநேகமான பெண்கள் இன்னமும் தமது வாழ்நாள் முழுவதிலும் பாகுபாடுகளுக்கு முகங்கொடுக்கின்றனர். இலங்கையின் சனத்தொகையில் சுமார் **52 சதவீதமானவர்கள்** பெண்கள். அவர்கள் ஆண்களைவிட கூடுதலான காலம் வாழ்கின்றனர். இருந்தபோதிலும், அவர்கள் தமது உரிமைகளைப் பிரயோகிக்கவும் தமது முழுமையான ஆற்றல்களை வெளிப்படுத்தவும் முட்டுக்கட்டையாக இருக்கும் சமூக, பொருளாதார மற்றும் சட்டத் தடைகளை எதிர்நோக்குகின்றனர். இலங்கையில் கூடுதலான சிறுமிகளும் பெண்களும் தமது கல்வியைப் பூர்த்தி செய்கின்றபோதிலும், அவர்கள் தொழில் அணியில் பங்குபற்றுவதும் தலைமைத்துவத்தில் பிரதிநிதித்துவம் செய்வதும் தொடர்ந்து குறைவாகவே இருக்கின்றது. **2021**ஆம் ஆண்டில்

பெண் தொழில் அணியின் பங்கேற்பு வீதம் 31.8 சதவீதமாக இருந்தது. பாராளுமன்றத்தில் பெண்களின் பிரதிநிதித்துவம் 53 சதவீதம் மட்டுமே. பெண்கள் மற்றும் சிறுமிகள் ஊதியம் இல்லாத பராமரிப்புப் பணியில் தொடர்ந்து ஈடுபடுத்தப்படுகின்றனர். நடைமுறையிலுள்ள பாலின மற்றும் சமூகப் பாரம்பரிய நியமங்கள், கட்டுப்படியான மற்றும் தரமான பிள்ளை பராமரிப்புச் சேவைகள் இல்லாமை, குடும்ப வேலைகளைப் பகிர்ந்துகொள்வதற்கு உதவி இல்லாமை, தொழில் செய்யுமிடக் கலாசாரம், கவனிப்பு மற்றும் பாதுகாப்பு இல்லாமை என்பன பெண்களின் வலுவூட்டலுக்கும் அவர்களின் பொருளாதார ஈடுபாட்டுக்கும் தடையாக இருக்கும் சில காரணிகளாகும்.

தொழில் அணியில் பெண்களின் பங்கேற்பு வரையறுக்கப்பட்டதாக இருப்பதால் அவர்களுக்கு ஓய்வூதியம், சேமிப்புகள் போன்றவற்றிற்கான வாய்ப்புகளும் மிகக் குறைவாகவே இருக்கின்றது. இதனால் வயோதிப காலத்தில் அவர்களின் வறுமையும் பிறரில் தங்கியிருக்க வேண்டிய நிர்ப்பந்தமும் அதிகரிக்கின்றன. இலங்கை துரித கதியில் ஒரு முதுமையடையும் சமுதாயமாக மாறிவருவதால் இந்த நிலைமை விசேட கவலை அளிக்கின்றது. தற்போதய சமுதாயத்திலும் பெண்களே தொடர்ந்தும் பெரும்பான்மையானவர்களாக இருப்பார்கள்.

பெண்களின் வலுவூட்டுதலுக்கு பாலின மற்றும் சமூக நியமங்கள் தொடர்ந்தும் தடையாகவுள்ளன. இலங்கையில் ஐந்திலொரு (**20.4%**) பெண்கள் தமது வாழ்நாளில் நெருங்கிய துணைவர் ஒருவரின் மூலம் பாலியல் மற்றும்/அல்லது உடல் ரீதியான வன்முறையை அனுபவித்துள்ளனர்; நாலிலொரு பெண்கள் (**24.9%**) தமது **15**ஆவது வயதிலிருந்து பாலியல் மற்றும்/அல்லது உடல் ரீதியான வன்முறையை அனுபவித்துள்ளனர் (மகளிர் சேமநல மதிப்பீடு, **2019). 90** சதவீதமான பெண்களும் சிறுமிகளும் தமது வாழ்நாளில் ஒரு தடவையாவது பொது பஸ்கள் மற்றும் ரெயில் வண்டிகளில் பாலியல் ரீதியான தொந்தரவுக்கு முகங்கொடுத்துள்ளனர் என்பதற்குச் சான்றுகள் உள்ளன. பெண்கள் மற்றும் சிறுமிகளின் ஆரோக்கியம், கௌரவம், பாதுகாப்பு மற்றும் சுயாதிக்கத்தை வன்முறைகள் மோசமாகப் பாதிக்கின்றன. இருந்தபோதிலும், இந்த விடயம் ஒரு மௌன கலாசாரத்தினால் தொடர்ந்தும் மறைக்கப்பட்டு வருகின்றது.

பாலின சமத்துவத்தை ஏற்படுத்துவதற்கு பாலியல் மற்றும் இனப்பெருக்க உரிமைகளுக்கு மதிப்பு அளிக்கப்படுவது அதிமுக்கியமாகும். ஒரு பெண் தனது குடும்பத்தைத் திட்டமிட முடியுமானால், அவளால் தனது வாழ்க்கையின் எஞ்சிய காலத்தையும் திட்டமிட முடியும். ஒரு பெண்ணானவள் சமுதாயத்தில் மேலும் முழுமையாகவும் சமமாகவும் பங்குபற்றுவதற்குக் கொண்டுள்ள உரிமையை உறுதிப்படுத்த வேண்டுமானால், பிள்ளைகளின் எண்ணிக்கை, நேரம் மற்றும் இடைவெளி என்பவற்றைத் தீர்மானிக்கும் உரிமை உள்ளிட்ட அவளது இனப்பெருக்க உரிமைகள் பாதுகாக்கப்படுவதும் ஊக்குவிக்கப்படுவதும் அவசியமாகும். பாலியல் மற்றும் இனப்பெருக்க ஆரோக்கியம் **(SHR)** பற்றிய தகவல்களை அறிந்திருப்பது முன்கூட்டிய கருத்தரிப்பு மற்றும் பல கர்ப்பம் தொடர்பான ஆரோக்கிய

இடர்களைக் குறைப்பதற்கு உதவும். இலங்கையிலுள்ள இளவயதினர் மத்தியில் பாலியல் மற்றும் இனப்பெருக்க ஆரோக்கியம் பற்றிய அறிவு திருப்திகரமாக இல்லை. சுமார் 50 சதவீதமானவர்கள் அடிப்படை **SHR** பிரச்சினைகளின் பெரும்பாலான அம்சங்கள் பற்றி அறிந்திருக்கவில்லை. 66 சதவீதமான பெண்கள் பூப்படையும் வரை மாதவிடாய் பற்றி அறியாதவர்களாக இருக்கின்றனர். **15** முதல் **24** வயதான பிரிவினர் மத்தியில் **HIV** தொற்று அதிகரித்துள்ளது. கிடைக்கும் தரவுகளின்படி, கருத்தடைச் சாதனங்களின் பாவனை நாட்டில் குறைவடைந்து வருகின்றது. **2016**ஆம் ஆண்டில், **30** சதவீதமான திருமணம் செய்த பெண்கள் கருத்தடைச் சாதனங்களினால் எவ்வித பயனுமில்லை என்று குறிப்பிட்டனர். கருத்தடைச் சாதனங்களைப் பாவிக்கத் தொடங்கிய **29** சதவீதமான பெண்கள் அவற்றின் பாவனையைக் கைவிட்டனர் (மக்கள் தொகை மற்றும் ஆரோக்கிய மதிப்பீடு, **2016).** இளவயதினர் பிரிவில் (**15** முதல் **34** வயதானவர்கள்) கருத்தடைச் சாதனங்களின் பாவனை வீழ்ச்சியடைத்துள்ளது. இலங்கையில் கருச்சிதைவு மீது சட்ட ரீதியான வரையறைகள் விதிக்கப்பட்டுள்ளபோதிலும், தினமும் **650**க்கு மேற்பட்ட பாதுகாப்பற்ற கருச்சிதைவுகள் இடம்பெறுகின்றன. இக் கருச்சிதைவுகளை நாடுபவர்களில் **80** சதவீதமானவர்கள் **30** வயதிற்கு மேற்பட்ட திருமணமான பெண்கள். பெண்கள் தமது பாலியல் மற்றும் இனப்பெருக்க உரிமைகளை முழுமையாக அனுபவிப்பதில் தடைகளை எதிர்நோக்குகின்றனர் என்பதையும் இந்த பாதுகாப்பற்ற கருச்சிதைவுச் சம்பவங்களை எடுத்துக்காட்டுகின்றன.

வலுவூட்டப்பட்ட பெண்கள் தமது குடும்பங்களினதும் சமூகங்களினதும் ஆரோக்கியம் மற்றும் உற்பத்தித் திறனுக்குப் பங்களிப்புச் செய்வதன் மூலம் பொருளாதார வளர்ச்சிக்கு வழிகோலுவார்கள். எமது சமுதாயம் வளம்பெற வேண்டுமாயின், பெண்களும் சிறுமிகளும் அடிப்படைச் சேவைகள், தொழில், சமூகப் பாதுகாப்பு, பாகுபாடுகள் மற்றும் வன்முறைகள் இல்லாத வாழ்க்கை ஆகியவற்றிற்குச் சம வாய்ப்புப் பெற்றுக்கொள்வதை நாம் உறுதிப்படுத்த வேண்டும். அப்பொழுதுதான் அவர்கள் அறிவான தீர்மானங்களை எடுத்து சிறப்பாக வாழ முடியும்.

## போட்டி விதிகள்

- வீடியோ படமானது அதன் தலைப்பு மற்றும் கிறெடிட் வரிகள் உள்ளடங்கலாக 1 முதல் 2 நிமிடங்களைக் கொண்டிருக்க வேண்டும்.
- பங்குபற்றுபவர்கள் இரண்டு போட்டித் தலைப்புகளில் ஒன்றைத் தேர்ந்தெடுத்து, அதனை ஆராய்ந்து, குறிப்பிட்ட பிரச்சினையொன்றைத் தெரிவுசெய்து, அப் பிரச்சினைக்கான பேண்தகு தீர்வொன்றை உள்ளடக்கிய வீடியோ ஒன்றைத் தயாரிக்க வேண்டும்.
- சமர்ப்பிக்கப்படும் வீடியோவில் பாதகமான, அவதூறான, பாலியல் ரீதியில் வெளிப்படையான, இழிவுபடுத்தும் அல்லது ஏனைய முறையற்ற உள்ளடக்கம்

எதுவும் இருக்கக்கூடாது. அது எவரையும் அவமதிப்பதாக அல்லது உரிமைகள், பதிப்புரிமைகள், வர்த்தகக் குறியீடுகள் அல்லது ஏதேனும் மூன்றாம் தரப்பின் விளம்பர உரிமைகள், தனியுரிமை அல்லது நன்மதிப்பை மீறுவதாக இருக்கக்கூடாது. ஒரு பண்டத்தின் அல்லது சேவையின் விற்பனையை ஊக்குவிப்பதற்கான ஏதேனும் விடயத்தையும் அது கொண்டிருக்கக் கூடாது.

- எத்தகைய வீடியோ தயாரிப்பு நுட்பங்கள் மற்றும் முறைகளும் பயன்படுத்தப்படலாம் (உதாரணம்: அனிமேஷன், ஆவணப் படம், நாடகம், பரீட்சார்த்த அல்லது கலைத்துவ வீடியோ மற்றும் கலப்பு ஆக்கம்).
- வீடியோ படைப்புகள் உங்கள் **Youtube**இல் பதிவேற்றப்பட வேண்டும்.
- படைப்புகள் எந்தவொரு உள்நாட்டு மொழியிலும் சமர்ப்பிக்கப்படலாம். எனினும், வசன வரிகளை ஆங்கிலத்தில் குறிப்பிடும்படி ஊக்குவிக்கப்படுகின்றது.
- பதிப்புரிமையை நீங்கள் கொண்டிருந்தாலன்றி அல்லது பதிப்புரிமை கொண்ட எதையேனும் இப் போட்டிக்கு பயன்படுத்த அனுமதிப்பத்திரம் பெற்றிருந்தாலன்றி, பதிப்புரிமை கொண்டுள்ள எவற்றையும் (இசை, உருவப்படங்கள், வீடியோ நறுக்குகள் முதலியன) வீடியோவில் பயன்படுத்தக் கூடாது.
- பதிப்புரிமை கொண்ட சகல விடயங்கள் தொடர்பாகவும் எழுத்துமூல அனுமதி பெறப்பட்டு, கோரப்படும்போது சமர்ப்பிக்கப்பட வேண்டும்.
- சகல வீடியோக்களும் ஒன்லைன் பிரவேசப் படிவத்தைப் பயன்படுத்தி 2023 ஜனவரி 15ஆம் திகதி பி.ப. 5.00 மணிக்கு முன்னர் சமர்ப்பிக்கப்பட வேண்டும். இக் காலக்கெடுவிற்குப் பின் சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பங்கள் கவனத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட மாட்டா.
- ஒன்லைன் பிரவேசப் படிவமானது உங்கள் **Youtube** இலுள்ள வீடியோவுக்கான இணைப்பு மற்றும் உங்கள் மூலாதாரங்களின் பட்டியல் (மூலாதாரங்களுக்கான இணப்புகள் போதுமானவை) சகிதம் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.
- சமர்ப்பிக்கப்படும் சகல படைப்புகளும் ஒரிஜினலாகவும் உங்கள் சொந்த ஆக்கங்களாகவும் இருக்க வேண்டும். ஒரிஜினல் அற்றவை என்று கண்டுபிடிக்கப்படும் படைப்புகள் போட்டிக்கான தகுதியை இழக்கும்.
- உங்கள் சமர்ப்பணங்களை **Youtube** இல் பதிவேற்றம் செய்யும்போது, அதனை இந்த வீடியோ போட்டி தொடர்பில் **UNFPA** வலைத்தளத்தில் அல்லது வேறேதும் ஊடகத்தில் பதிவிறக்கம் செய்ய, இணைக்க அல்லது உட்பொதிக்க **UNFPA** க்கு வசதியளிக்கும் தனியுரிமை/பகிர்வு அமைப்புகளை நீங்கள் தெரிவுசெய்ய வேண்டும். நீங்கள் இப் போட்டிக்கு வீடியோ ஒன்றைச் சமர்ப்பிப்பது, அச் சமர்ப்பணம் **UNFPA**

மூலம் காட்சிப்படுத்தப்படும் அல்லது பயன்படுத்தப்படும் என்பதற்கான உத்தரவாதமாகாது.

- போட்டிக்கான வீடியோவை தனிநபர்களாக அல்லது மூன்று பேர் வரை கொண்ட குழுக்களாகச் சமர்ப்பிக்கலாம்.
- போட்டிப் பிரிவு அல்லது தலைப்பு எவ்வாறிருந்தாலும், போட்டியில் பங்குபற்றும் ஒவ்வொரு நபரும் அல்லது ஒவ்வொரு குழுவும் ஒரு வீடியோவை மட்டுமே சமர்ப்பிக்க முடியும்.
- வீடியோவை சமர்ப்பிக்கும் குழுவிலுள்ளவர்கள் வெவ்வேறு வயதுப் பிரிவுகளைச் சேர்ந்தவர்களாக இருந்தால், அவர்களில் மிகக் கூடிய வயதுடையவருக்கான பிரிவே தெரிவு செய்யப்பட வேண்டும்.
- வீடியோவில் தெளிவாக அடையாளம் காணக்கூடிய ஆட்கள் எவரும் இருந்தால், படைப்பு சமர்ப்பிக்கப்படுவதற்கு முன் அந்த நபர் ஓர் உத்தியோகபூர்வ புகைப்பட/வீடியோ வெளியீடு படிவத்தில் கையொப்பமிட வேண்டும். பராயமடையாதவர்களைப் பொறுத்தவரையில், அவர்களின் பெற்றோர் அல்லது பாதுகாவலர் கையொப்பமிட வேண்டும்.

## தீர்ப்பு

நடுவர்கள் மன்றம் தனது தேர்வுகளை மேற்கொள்ளும்போது பின்வரும் விடயங்களைக் கவனத்திற்கு எடுத்துக்கொள்ளும்:

- உள்ளடக்கம் மற்றும் எண்ணக்கருவின் ஒரிஜினல் தன்மை.
- எண்ணக்கருவின் ஒட்டுமொத்தச் சமர்ப்பணம்.
- காட்சி வடிவமைப்பு மற்றும் வீடியோவின் தோற்றமும் உணர்வும் (அனிமேஷன் அல்லது நேரடி இயக்கம்).
- செய்தியின் புரிதல் மற்றும் பார்வையாளர்கள் மீதான தாக்கம்.
- **Youtube** வீடியோவுக்குக் கிடைத்த “**Likes**”களின் எண்ணிக்கை. 2023 ஜனவரி 19ஆம் திகதி வரை கிடைத்த மிகக் கூடிய “**Likes**”களின் அடிப்படையில் வெற்றியாளர் தெரிவு செய்யப்படுவார்.

போட்டியின் உத்தியோகபூர்வ விதிகளுக்குக் கட்டுப்பட்டு நடக்கப் போட்டியாளர்கள் இணங்குகின்றனர். நடுவர்கள் மன்றத்தின் தீர்ப்புகளே இறுதியானவை. அவற்றை ஆட்சேபிக்க முடியாது.

## பரிசுகள்

தலைப்பு அடிப்படையிலான ஒவ்வொரு பிரிவிலிருந்தும் இரண்டு வெற்றியாளர்களுக்குப் பரிசுகள் வழங்கப்படும் (மொத்தம் **6** பரிசுகள்).

- சிறுவர்கள் பிரிவு: **GE,** முதுமையடைல், கூடுதலான "**Likes**" (3 பரிசுகள்)
- திறந்த பிரிவு: **GE,** முதுமையடைல், கூடுதலான "**Likes**" (3 பரிசுகள்)

பரிசுகளுள் அன்பளிப்பு வவுச்சர்கள் (இ.ரூ.**100,000** வரை) மற்றும் கம்பியூட்டர் மேசைகள் உள்ளடங்கும்.

வெற்றியாளர்களுக்கு **2023** ஜனவரி **30**ஆம் திகதி மின்னஞ்சல் மூலம் அறிவிக்கப்படும்.

## உங்கள் வீடியோவுக்கான ஆலோசனைக் குறிப்புகள்

- இரண்டு போட்டித் தலைப்புகளில் நீங்கள் அதிக ஆர்வமும் உற்சாகமும் காட்டும் தலைப்பைத் தேர்ந்தெடுங்கள்.
- இந்த விடயத்தை ஆராய்ந்து, ஒரு குறிப்பிட்ட பிரச்சினையைத் தெரிவு செய்யுங்கள். முதுமையடையும் சனத்தொகை, பாலின சமத்துவம் ஆகிய இரண்டும் பரந்த தலைப்புகளாகும். அவற்றின் கீழ். அநேக பிரச்சினைகள் உள்ளன. அவற்றை ஆராய்ந்து நீங்கள் கவனம் செலுத்த வேண்டிய ஒரு குறிப்பிட்ட பிரச்சினையை அடையாளம் காண்பது நன்று.
- உங்கள் வீடியோவை திட்டமிடுங்கள். கதைவிபர வரைபடம் **(Storyboard)** ஒன்றை நீங்கள் பயன்படுத்தலாம்.
- உங்கள் வீடியோ குறித்து தெளிவாகவும் சுருக்கமாகவும் இருங்கள். உங்கள் தீர்வு யோசனைக்கு ஆதாரமான மிகச் சிறந்த தகவல்களைப் பயன்படுத்துங்கள் (நீங்கள் சேகரித்த முழுத் தகவல்களையும் அல்ல).
- உங்கள் வீடியோ இயற்கைச் சூழல் முறையில் படம்பிடிக்கப்படுவதை உறுதிப்படுத்துங்கள். ஒளியமைப்பைச் சரிபாருங்கள். நிழல்கள் விழாமலிருப்பதை பார்த்துக்கொள்ளுங்கள். ஒலி தெளிவாக இருப்பதை உறுதிசெய்யுங்கள்.
- உங்கள் வீடியோவை இயன்றளவு விரைவாக **Youtube** க்கு பதிவேற்றம் செய்தால், கூடுதலான "**Likes**" பெற்றுக்கொள்வதற்கு அனுகூலமாயிருக்கும்.

## தொடர்பு

போட்டி சம்பந்தமான ஏதேனும் விசாரணைகளுக்கு, தயவுசெய்து srilanka@unfpa.org என்ற மின்னஞ்சல் முகவரியூடாகத் தொடர்புகொள்ளுங்கள்.

மின்னஞ்சலின் விடயக் கட்டத்தில் **“8 billion - online video competition”** என்று குறிப்பிட மறவாதீர்கள்.